# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 126/2021

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் நாள் வியாழக்கிழமை PW4-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW4 Examined as PW 4

| | | |
|---|---|---|
| Date | : | 11.01.2024 |
| Name | : | வைத்தியநாதன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

Accused A1. A2 present.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கஞ்சநகரத்தில் வசிக்கிறேன். ஏ.சி. மெக்கானிக்காக இருக்கிறேன். ஆஜர்எதிரி மோகன்தாஸ் தெரியும். அ.சா.1 யை தெரியும். 2021 ம் தேதி பிப்பரவரி மாதம் பிரச்சனை நடந்ததாக சொன்னார்கள். என்ன பிரச்சனை என்பது எனக்க தெரியாது.அந்த சமயம் நான்ஊரில்இல்லை. போலிசார்என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி ஆய்வாளர் முன்பாக அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)**

04.02.2021 தேதி இரவு 10.00 மணியளவில்நான் வீட்டில் இருந்தபோது நடராஜன்வீட்டில்ஒரே சத்தமாக இருந்தது என்றும்அப்போது நடராஜன் மகள் விநோதினி அழுதுக்கொண்டு ஒடி அவர் வீட்டிற்கு சென்றார்என்றும் விநோதினியின் கணவர் கார்த்திகேயன் தூர்த்திக்கொண்டு பின்வந்து

வீநடராஜன் வீட்டுவாசலில் வைத்து அடித்தார் என்றும்அதை பார்த்த நடராஜனும் அவரது மனைவி வீரம்மாளும்ஏன்அடிக்கிறீர்கள் என்று கேட்டார்கள் என்றும் கார்த்திகேயன் உன் வேலை பார் என்று தாகாத வார்தையால்அவர்களை திட்டிஅருகில் கிடந்த பூவரசன்கட்டையை எடுத்து இத்தோடு ஓழிந்துபோடா என்று சொல்லிக்கொண்டே நடராஜன் தலை மற்றும் தோள்பட்டை தாவங்கட்டையில் மாறி மாறி அடித்தார் என்றும் அப்போது வீரம்மாளும்அவரது மகன் விமல்ராஜ் அடித்துக்கொல்லுங்கடா என்று சொல்லி சத்தம்போடவே கார்த்திகேயன் தம்பி மோகன்தாஸ் ஓடிவந்து என்னடா ஊரை கூட்டுகிறாய் என்று சொல்லி வீரம்மாள் தலையில்அடித்தும் பிடித்து கீழே தள்ளி மோகன்காலால் உதைத்து விமல்ராஜ்தடுத்தபோது வரையும்அடித்து கீசூழ தள்ளிவிட்டார் என்றும் இதை பார்த்து நானும் எங்கள் தெருவில்வசிக்கும் ராமு மகன் மகேந்திரன் தடுக்கசென்றபோது உங்களை கொலை செய்தால் தான் எனக்கு ஆத்திரம் அடங்கும் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.